**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 10.11.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப வணிககாப்பகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட NIDHI-PRAYASEEs-க்கான மத்தியஅரசின் மானியம் வழங்குதல்

மத்தியஅரசின் தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை - (DST) தொழில்முனைவோர் மேம்பாட்டுவாரியத்தின் (NSTEDB) நிதிஉதவியுடன் NIDHI – PRAYAS எனும் திட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக இயக்குனரகம் தொழில்நுட்ப வணிககாப்பகத்தில் 2023-ல் இருந்து செயல்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப வணிககாப்பகமானது புதிய சிந்தனைகளை கொண்ட இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கும் ரூ.10 இலட்சம் வரையிலான தொகையை மானியமாக வழங்க இயலும்.

**NIDHI – PRAYAS சிறப்பம்சங்கள்:**

- ஒரு தனி நபர் சிந்தனையாளரோ அல்லது புத்தொழில் நிறுவனமோ இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.
- புதிய சிந்தனைகள் அல்லது கண்டுபிடிப்புகள் வேளாண் தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் அறிவியல் சார்ந்ததாக இருக்க வேண்டும்.
- ரூ.10 லட்சம் வரையிலான இம்மானிய தொகையானது புதிய சிந்தனைகளை சந்தைப்படுத்தும் பொருளாக உருவாக்கவும் சந்தைப்படுத்தப்படும் பொருளின் முன்மாதிரி வளர்ச்சிக்காகவும் வழங்கப்படும்.

வேளாண் வணிக இயக்குனரகம், தொழில்நுட்ப வணிககாப்பகத்தில் NIDHI–PRAYAS திட்டத்தின் வலைதள விண்ணப்பங்கள் 19.05.2023 முதல் 13.08.2023 வரை வரவேற்கப்பட்டது. அதில் மொத்தம் 59 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. இத்திட்டத்தை கண்காணிக்க மற்றும் செயல்படுத்த APMC குழு அமைக்கப்பட்டுஅதன் மூலம் 5 தொழில் முனைவோர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட 5 தொழில் முனைவோர்கள் அவர்களின் புதிய சிந்தனைகளை சந்தைப்படுத்தும் பொருளாக உருவாக்க மேம்பாட்டு நிதியாக 2023-2024 நிதியாண்டிற்கானதலா ரூ10 இலட்சம் மானியம் இரண்டு தவணையாக வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள NIDHI-PRAYASEEs :

1. M/s.Vamp Solutions Pvt Ltd., திரு. தாமோதரன் கருப்பசாமி - பேட்டரி மூலம் இயங்கும் ரோட்டோவேட்டர் மற்றும் களை எடுக்கும் இயந்திரம்
2. M/s.AAVYUKTH Cow Products., திருமதி.ஸ்ரீத்தாராஜலட்சுமி – மாட்டு சாணத்திலிருந்து பூச்சு தயாரித்தல்
3. M/s.COCOVETA., திரு.கிரிபிராசாத்- தென்னையிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட நீராசர்க்கரை
4. M/s.Richzhon Industries., திருசந்திரசேகரன் - குறைந்த வெப்பநிலை வெற்றிட இயந்திரம் மூலம் உயர் தரத்தில் பழங்கள் மற்றும் காய்கறிகள் சீவல்கள் தயாரித்தல்
5. M/s.DRK SMART BIO Solutions., முனைவர் ராஜ்குமார் - நன்மைபயக்கும் நுண்ணுயிர் கொண்டு புதிய காய்கறிகள் மற்றும் பழங்களின் ஆயுட் காலத்தை மேம்படுத்துதல்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் V.கீதாலட்சுமி, தேர்ந்தெடுக்கபட்ட 5 NIDHI-PRAYASEEs களுக்கு தலா ரூ.6.00 இலட்சம் முதல் தவணை மானியமாக 10.11.2023 அன்று வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கக இயக்குநர், முனைவர் E.சோமசுந்தரம் மற்றும் தொழில்நுட்ப வணிககாப்பக செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி திரு.A.V.ஞானசம்பந்தம் உடன் இருந்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**